தனிப்பிரதி – ரூ. 20/-　　　　ஆண்டு சந்தா– ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

ஜூலை 2022　　மலர் 1 இதழ் 6　　இனிக்கும் இலக்கிய இதழ்




● மஞ்சுளா காந்தி ● செ.புனிதஜோதி ● ருக்மணி வெங்கடேசன் ● தாழை.இரா.உதயநேசன்
● கா.ந.கல்யாணசுந்தரம் ● வே.புகழேந்தி ● ஔவூர் மணிமேகலை ● த.இலக்கியன்
● அருட்திரு பிலிப்சுதாகர் ● கு.கதிரேசன் ● வைரமுத்து ● மனுஷ்ய புத்திரன்




உனக்கென உரிய
நேரம் ஒதுக்கிடு!

துணிச்சல் தைரியம்
உன்னுள் வளர்த்திடு!

சிரத்தில் அடித்துத்
தன்னையே செதுக்கிடு!

வலிகள் பொறுத்து
உயிர்கொண்டு எழுந்திடு!

கனவுகள் இலக்குகள்
உயர்வாய்க் கொண்டிடு!

வெற்றி வாகையால்
உலகம் வென்றிடு!

–தமிழ்மாமணி

**தாழை.இரா.உதயநேசன்**

# முத்தமிழ் நேசன்

**இனிக்கும் இலக்கிய இதழ்**

ஜூலை 2022 மலர் 1 இதழ் 6

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

**த.அமுதா**

**ஆசிரியர் குழு**

முனைவர்.ஜோ.சம்பத்குமார்

கவிஞர் செ.வீரமணி

த.ஓவியா

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் – 635 802

திருப்பத்தூர் மாவட்டம்


## தலையங்கம்

### களேபரங்கள்

தமிழக அரசியல் களத்தைக் கடந்த மூன்று நான்கு வாரமாக அலைக்கழித்து வருவது ஒரு கட்சிக்குள் நடக்கும் களேபரம். பொதுமக்களின் கண்ணெதிரிலெயே, இரண்டு முக்கியப் புள்ளிகள் மோதிக்கொள்கிறார்கள்.

அரசியலில் மோதலும் போட்டியும் இருப்பதில் தவறில்லை. அது மக்களைக் கவர்ந்தவர் யார்? அரிய செயல்களால் மக்களின் செல்வாக்கைப் பெற்றவர் யார்? என்பது போன்ற ஆரோக்கியமான போட்டியாக இருந்தால் நாமும் ரசிக்கலாம்.

ஆனால் ’எனக்குதான் தலைவராகும் தகுதி இருக்கிறது. நான் தான் கட்சியை வழி நடத்தும் வல்லமையைப் பெற்றவன். நாளை, முதல்வர் பதவியில் உட்காருவதற்கு நானே தகுதியானவன் ’என்றபடி, அவர்கள் ஊடகங்களின் கண்முன்பாக, பகிரங்கமாக மோதிக் கொள்வதைத்தான் சகிக்க முடிவதில்லை.

பதவி என்பது, நாம் செய்கிற செயல்களால் தேடிவரவேண்டுமே தவிர அதைத் துரத்திக்கொண்டு ஓடக் கூடாது. நமக்கு இன்னொரு சந்தேகமும் எழுகிறது. அங்கே அவர்களைவிட உழைத்தவர்கள், மக்களுக்காகப் போராடி சிறைக்குச் சென்றவர்கள், கட்சியையும் அதன் கொள்கையையும் உயிராக நேசிப்பவர்கள் என்று வேறு எவருமே இல்லையா?

அன்புடன்

**த.அமுதா**

– ஆசிரியர்

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் ( unicode ) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**mutamilnesan2022@gmail.com**

# பிறை நுதல் பிஞ்சுகள்



மழலைகள் எனும் மகிமைகள்....
முகம் மலர்ந்தமுகில்களோ!
மூடி வைத்த சிமிழ்களோ!
பிறை நுதல்பிஞ்சுகளோ!

பிதற்றி ஈர்க்கும் அஞ்சுகமோ!
வண்டு நிகர் விழிகளோ!
வண்ணக் கன்னம் சுளைகளோ!
பொன்மேனி பூந்தளிரோ!

பொம்மை நாசிபுதுமலரோ!
தவழ்ந்து வரும்தாமரையோ!
தத்தி நிற்கும்திரவியமோ!
விரல் பத்தும்விந்தைகளோ!

விஷமச்சிரிப்பு வெண்மதியோ!
எயிறு இல்லாதஎழில்களோ!
ஏல வாசச் சுவைகளோ!
மழலைகள் மகிமைகள்!
மனம் மயக்கும் மகிழ்வுகள்!



**மஞ்சுளா காந்தி**

# மின்சார மலர்கள்



சுடச்சுடக் குளிர் காயும்
மார்கழியில்
உன் பார்வையில்
பட்டுத்தெறிக்கும்
ஒரு துளி தீ
குளிர் தணிக்கும்
போர்வை.

சுடச்சுட வரும் தேநீரை
ஊதி ஆற்றும்
இதழ் மழையில்
தெறிக்கும் தேநீர் சாரல்
எனக்கு அருந்த கிடைத்த
தேவாமிர்தம்.

விழிகளால் பேசப் பேச
எனக்குள் பிரசவிக்கும்
காதல் குழந்தை...
மௌனத்தை
கொழு கொம்பாய்
பற்றும் வேளையில்
எனக்குள் பூக்கும்
என்னைத் தாக்கும்
மின்சார மலர்கள்.

உன்நினைவே
என்னை அருந்தும்
தீ

தீக்குள் தீ முட்டி
தீயையும்
தித்திக்க வைக்கும்
நீ ஒரு பெருந்தீ.

**-செ.புனிதஜோதி**

சிறுகதை

# நிழல் தரும் குடை



மாலா தன் அறையில் மன அமைதி இன்றி அமர்ந்திருந்தாள். கடந்து வந்த பாதை மனதில் நிழல் படமாக தோன்றியது .

வண்டியூர் கிராமத்தில் கூலி வேலை செய்து பிழைப்பை நடத்தும் பெற்றோர்களின் ஒரே மகள் மாலா. படித்து அந்த ஊரின் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியையாக சேர்ந்து பணியாற்றி வந்தாள். தான் வேலையில் சேர்ந்தது முதல், பெற்றோரை நன்கு கவனித்துக் கொண்டாள்.

அந்த ஊர் பண்ணையார் மகன் பாலனுக்கு மாலாவை பெண் கேட்டு அவன் அம்மா மீனாட்சியும், அப்பா பெருமாளும் வந்தனர். மாலாவின் அம்மாவும் அப்பாவும் தன் மகளுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கப் போகிறது என்று மனம் நிறைந்து சம்மதித்தனர். திருமணமும் நடந்தது.

திருமணத்திற்கு பின்னர் தான் தெரிந்தது பாலன் புத்தி சரியில்லாதவன் என்று. இரண்டு மாதங்களில் மாமனார் இறந்தார்.

மாமியார் மீனாட்சி, ‘வேலையை விட்டு விட்டு வீட்டை கவனி போதும் ‘ என்று வற்புறுத்தவே வேலையை விட்டாள் மாலா . அழகான ஆண் குழந்தை பிறந்தது. இரண்டு வருடங்களில் பாலன் மாரடைப்பில் இறந்தார். பெண் நிலைக் கண்டு மனம் வருந்திய மாலாவின் பெற்றோர்களும் சீக்கிரமே இறந்தனர்.

பாலனின் அம்மா மீனாட்சி, மருமகளை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. பேரன் சங்கரை

மாலாவிடம் பேச அனுமதிப்பதில்லை. அவளைப் பற்றி தவறாகவே கூறி வெறுப்பை உண்டாக்கி விட்டார். மகன் இறந்ததால் பேரனிடம் அதீத அன்பு.



‘ நீயா செஞ்ச? பாட்டி எனக்காக செஞ்சிருக்காங்க.‘ என்று கூறிச் சென்றான். தான் தன் மகனுக்காக செய்ததை கூட கூற முடியாத அம்மாவாக நின்றாள்.

மாலா அந்த கிராமத்து குழந்தைகளுக்கு இலவசமாக பாடம் சொல்லி கொடுத்து வந்தாள். பரீட்சைக்கு பணம் கட்ட முடியாதவர்களுக்கு பண உதவி செய்வாள்.

மாமியார் மீனாட்சிக்கு அது பிடிக்கவில்லை. ‘ பையனுக்கு படிப்பு சொல்லி கொடுக்காம ஊருக்கெல்லாம் உபகாரி‘ என்று தினம் வசை பாடுவாள். மாலா சங்கரை பாடம் சொல்லித் தருவதாக அழைத்தால், ‘ குடிசையில் இருந்து வந்தவர்கள் உடன் உட்கார்ந்து நான் படிக்க மாட்டேன்‘ என்று மறுப்பான்.

பாட்டி மீனாட்சி ‘ என் பேரன் படித்தது போதும். மூன்று தலைமுறைக்கு சொத்து இருக்கு. உட்கார்ந்து திங்கலாம் ‘ என்று அவனை மாலாவிடம் படிப்பு கற்க கூட அனுமதிக்க மாட்டார்.

அப்படியே வருடங்கள் உருண்டோடி அவன் கல்லூரி படிப்பு முடிந்து பணியிலும் சேர்ந்து விட்டான். மாமியாரும் இறைவனடி சேர்ந்தார். பையனுக்கு அம்மாவிடம் துளிப் பாசம் கூட இல்லை.

அவனே ஒரு பெண்ணை பார்த்து திருமணம் செய்து கொண்டான். ராசியில்லாத அம்மாவை அழைக்கவில்லை. இன்று அந்த பெண்ணுடன் கிராமத்திற்கு வந்துள்ளான்.

‘ வாப்பா...! ‘ என்று பாசத்துடன் அழைத்த அம்மாவிடம் பேசாமல் சென்றான்.

‘ உங்க அம்மா ராசியில்லாதவ. அதனால் தான் முதலில் தாத்தா இறந்தார். பிறகு உங்க அப்பா இறந்தார். அவளோட ராசியால் உனக்கு ஒன்றும் வராம இருக்கனும் ‘ என்று அடிக்கடி கூறி சங்கர் மனதில் நஞ்சை புகுத்தி விட்டாள் பாட்டி மீனாட்சி.

மாமியாரின் குரல் கேட்டு நிகழ் காலத்திற்கு வந்தார்.

சங்கர் வீட்டின் முன் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனை பாட்டி மீனாட்சி ‘ சங்கர்...! கொஞ்சம் உள்ளே வாடா..!‘

‘ இதோ வரேன் பாட்டி ‘ என்று உடனே உள்ளே சென்றான் பத்து வயது பேரன்.

‘ இந்தா இதை சாப்பிடு. ‘ என்று குளோப் ஜாமூனை கொடுத்தாள் பாட்டி.

‘ ரொம்ப நல்லாயிருக்கு பாட்டி...! எனக்கு பிடித்ததை செஞ்சு தர பாட்டி.. ! ‘ என்று வாஞ்சையுடன் கட்டிக் கொண்டான் பேரன் சங்கர்.

அங்கு வந்த மாலா ‘ குலோப்ஜாமூன் சாப்பிட்டயா? ‘ என்று அன்புடன் கேட்டாள்.



‘ எல்லா சொத்துக்களையும் விற்கத் தான் வந்தேன். நாளைக்கு ரிஜிஸ்டரேஷன். நீயும் வந்து கையெழுத்து போடு. சென்னையில வீடு வாங்கப் போறேன்‘ என்ற பையனை மகிழ்வுடன் பார்த்தாள் மாலா.

அடுத்த நாள் ரிஜிஸ்டரேஷன் முடிந்ததும் மாலாவை அங்கே விட்டு விட்டு பணத்துடன் மகனும் மருமகளும் சென்று விட்டனர்.

எங்க போவது என்று தெரியாமல் சாலையில் நின்றிருந்த மாலா மயக்கமானாள். கண் விழித்து பார்த்த பொழுது ஒரு பங்களாவில் இருப்பதை உணர்ந்தாள்.

‘ அம்மா..! என்னை தெரியலையாமா..! நான் ஆறுமுகம். படிப்பு சொல்லி கொடுத்து பரிட்சைக்கு பணம் கட்டி என்னை இந்த நிலைக்கு உயர்த்திய தெய்வம் நீங்க. நான் தான் இந்த மாவட்ட கலெக்டர். இது நாள் வரை வட மாநிலத்தில் வேலை பார்த்தேன். நேற்று தான் இங்க வந்து பணியில் சேர்ந்தேன்‘ என்று ஒரே மூச்சில் அனைத்தும் மகிழ்வுடன் கூறினான்.

‘ உங்களை பார்க்க வரும் போது தான் நீங்க மயங்கி விழுந்ததை பார்த்து வீட்டிற்கு அழைத்து வந்தேன். எல்லாம் கேள்வி பட்டேன். உங்க பையன் பேரில் போலீஸில் மனு கொடுத்து உள்ளே தள்ளுகிறேன் ‘ என்றான்.

‘ வேண்டாம்பா. நீ என்னை அழைத்து வந்ததற்கு மகிழ்ச்சி. என்னை முதியோர் இல்லத்தில் சேர்த்திடு ‘ என்றாள் மாலா.


‘ நீங்க இங்கயே என் அம்மாவாக இருங்க ‘என்ற ஆறுமுகமும் அவன் மனைவி யும் கேட்டுக் கொண்டனர். அவர்கள் பையன் ‘பாட்டி நீங்க தான் அப்பாவிற்கு பாடம் சொல்லி கொடுத்தீர்கள். எனக்கும் சொல்லி கொடுக்கனும் ‘ என்று கேட்டதும் மாலாவால் மறுக்க முடியவில்லை.

அடுத்த நாள் ‘ காலை வணக்கம் அம்மா ‘ என்று மாலாவை சுற்றி பல குரல்கள். கண் திறந்து பார்த்தால் அவள் பாடம் சொல்லிக் கொடுத்த பல பிள்ளைகள். அனைவரும் மாலாவை பார்க்க வந்திருந்தனர்.

மகிழ்ச்சியில் வார்த்தைகளே வரவில்லை. ஒரு பையன் கை விட்டாலும் ஓராயிரம் பிள்ளைகள் மாலாவிற்கு நிழல் தரும் குடையாக நின்றனர்

- ருக்மணி வெங்கடேசன்

# உதயநேசன் கவிதைகள்



## அலைகள் அடங்குமடா



எரிதழல் எங்கும் பாரடா
எரியுது வாழ்வெனக் கூறடா

இளைஞனும் இங்கு தெருவிலடா!
இளைத்தவன் அவனாய் இல்லையடா

பார்க்கும் திசையெங்கும் நெருப்படா
பாரா முகமேன் பொசுக்கடா

கனவுகள் அனைத்தும் அழியுதடா
கவலைகள் உள்ளே வழியுதடா

நாடுகள் வளைய சுற்றிவந்தும்
நலங்காண மனதில்லை – வலிக்குதடா

பாரதத் தாயின் உள்ளமெலாம்
பற்றி எரிவதும் உண்மையடா

அக்கினிக் கொரூரம் மறையுமடா
அலைகள் முழுதாய் அடங்குமடா

# முப்பொழுதும் அவளே..!



விடியும் வேளை பிறக்குமடா
வெளிச்சப் பாதைகள் திறக்குமடா

முக்கனிச் சுவையோ
முழுநிலா அழகோ
உயிரில் உணர்வில்
உறைந்தவள் அவளோ

தென்றலாய்த் தவழ்ந்து
சில்லெனக் குளிர்ந்து
என்றன் மனதில்
நிலைத்ததும் சுகமோ

முழுமதி அவளின்
முகத்தினைப் பார்த்து
முழுதாய்த் தொலைந்தேன்
மீளவில்லை ஏனோ

தேனொழுகும் சிரிப்பும்
தெவிட்டா பேச்சும்
வண்டாய் மாற்றுதே
மயக்கம் தெளியுமோ

இந்திர லோகமும்
இறங்கியே வந்து
இணையேதும் இல்லையென
அவளைக் கொஞ்சுமே

ஆண்டுகள் ஆயிரம்
ஆனாலும் இவளின்
உயிரினை என்னுயிர்
விலகிட நினைக்குமோ

முப்பொழுதும் கற்பனைகள்
மூழ்கடிக்குதே எனையே

# தடம்பதிக்கும் தன்முனைக் கவிதைகள்

*தொகுப்பு: முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்*

வெளிச்சமே உன்னை
நிரம்ப பிடிக்கும்
என் நிழலை
அறிமுக படுத்தியதால்.

**– சாண்டில்யன் விவேகானந்தன்**

கசியுமுன் விழிகளோரம்
கைவிரல் நானாய் வந்தேன்!
விசித்திரம் என்னை நீயும்
விலக்கிடத் துணிதல் தானே

**– கவிக்கோ துரைவசந்தராசன்**

நீகாத்திருக்கிறாய் எனக்காக
நான்காத்திருக்கிறேன் உனக்காக
காத்திருப்பில் கரைந்துகொண்டிருக்கிறோம்
ஒருவரையொருவர் பார்க்காமலேயே!

**– வெற்றிப்பேரொளி**

ஏறியவரை நினையாமை
ஏணிக்குப் பெருந்தன்மை
ஏணியை நினையாமை
ஏறியவனுக்குச் சிறுமை

**– சோமு சக்தி**

உலையான சோற்றுக்கு
உனதான பக்குவமே
உப்பற்றுப் போனாலும்
ஒப்பில்லை என்பேனே

**–வாசன் சாவி**

சித்திரமும் கைப் பழக்கம்.
செந்தமிழும் நாப் பழக்கம்.
கத்தி விழியாளே..உன்
காதலென் மனப் பழக்கம்.

**– ஜென்ஸி செல்வராஜ்**

எண்ணும் எழுத்தும்
அறிந்தால் ஏறெடுத்து படிக்கலாம்
மண்ணும் மகுடமாகும்
கல்லும் கருவரையாளும்.

**– சேந்தன்குடிச் செந்தமிழாழன்**

சுவைத்துக் கொண்டே
ரசித்துக் கொண்டிருக்கிறான்!
கையிலே தேநீர்
கண்ணருகே காதலி!

**– மா.ஷங்கர்**

கிணற்றுக்கு நேராக
சாய்ந்திருக்கும் தென்னை
எத்தனை தன்னம்பிக்கை
இந்தத் தூக்கணாங்குருவிக்கு

**– தமிழ் தம்பி**

சுனையில் ஊறும் தெளிநீர்
எனது மொழியின் வார்த்தைகள்
கையள்ளி நழுவிய துளிகளின்
மிச்சமாய் இந்தக் கவிதை

**– ரவிஜி**

காதலுக்காக மட்டுமல்ல
காட்டிக் கொடுக்கவும்
முத்தம் தரலாம்
யூதாஸ் மாதிரி.

**– வண்ணை வளவன்**

காத்து இருக்கின்றேன்
வெகுநேரம் வெறுமையாக.
மோதும் தேநீராவியில்
தெரியும் அவன் முகம்..

**– ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**

என்றும் கர்வம்
கொண்டதில்லை உப்புக்கல்
மனித நாவின் பலம்,
பலவீனங்களை அறிந்திருந்தும்

**– கொள்ளிடம் காமராஜ்**

# நனையும் காதல்

ஒதுங்க நினைத்தேன்
மனதில் இடம் கொடுத்தாய்.
கார்காலம் இன்னும்
எத்தனை நாளோ?

ஆகாயப் பட்சிகள் விதைப்பதில்லை
என்னை அடிக்கடி விதைக்கிறேன்.
பயிராக நீயே முளைப்பதால்
அறுவடை நாள் அருகிலில்லை.

ஊசி இலைக் காடுகளை
உரசி வந்த தென்றலே!
திருவிழா பக்கம் வராதே.
பலூன் விற்க வேண்டுமவன்.

மலைச்சாரலும் மழைச்சாரலும்
சுகமானவை; இதமானவை.
பறக்கவிடு நம் காதலை
ஸ்பரிசம் பெறட்டும் பலமுறை.

’பருவ’ மழை வருடந்தோறும்
’அடை’ மாரியாய் பெய்தாலென்ன?
பருவம் அடைய வில்லையே
அவள் இன்னும்.

இரண்டு குடைகள்
எதற்கு என்கிறாய்.
உன்னுடன் இணைந்து
நனையுமே என் காதலும்.

மழைக்கால மண்வாசனை
இமை மூடி ரசிக்கிறாய்.
சுமந்து வந்த தென்றல்
சுமைக்கூலி கேட்கையில்.

குடையை வேகமாய் மடி
மறையக் காத்திருக்கும் வானவில்.
உன் தரிசனம் ஒன்றே
நிதர்சனம் என்னும் நிறங்கள்.



– முனைவர் வே. புகழேந்தி



# விதையாய் எழுவோம்!

விதையாய் நம்மை நினைத்திடுவோம்!
வீறாய் எழுந்தே உயர்ந்திடுவோம்!
புதைக்கும் கேட்டை விலக்கிடுவோம்!
புதிய ஒளியாய் மேலெழுவோம்!
உதைக்கும் பந்தும் எம்பிடுமே!
உணர்ந்தால் வாழ்வில் துயரில்லை!
கதைக்கும் மனிதர் கூட்டத்தில்
களத்தை வென்று காட்டிடுவோம்!

மரங்கள் பழங்கள் யாவையுமே
மண்ணில் புதைத்த சிறுவிதையால்!
உரமாய் நெறியை ஏற்றிடுவோம்!
உலகை வென்று வலம்வருவோம்!
இரக்கம் கருணை மனிதத்தை
என்றும் மனத்தில் நிறுத்திடுவோம்!
குரலில் தெளிவைக் கொண்டிடுவோம்!
குணத்தால் பகையை வென்றிடுவோம்!

பிறவி என்றும் ஒருமுறைதான்!
பெயரை நிறுத்திச் சென்றிடுவோம்!
அறத்தை அன்பைப் பின்பற்றி
அறிவுத் திறனில் உயர்ந்திடுவோம்!
உறவும் நட்பும் வாழ்த்திடவே
உணர்வில் உண்மை காட்டிடுவோம்!
திறமை ஆற்றல் நம்முள்ளே
தெளிந்தால் வெற்றி எந்நாளும்!



*– ஒசூர் மணிமேகலை*



# என்னைக் கொண்டாடும் தனிமை!

– த.இலக்கியன்

என்னுள் நிரம்பியவளே
நீமட்டும் ஏன்
வெற்றாக இருக்கிறாய்
நான் இருக்கையில்?

தொலைக்காத
ஏதோ ஒன்றைத்தான்
எல்லோரும்
தேடிக்கொண்டிருக்கிறோம்;
என் காதலும் அப்படிதான்.

உன்னை கடத்திக்கொண்டு வா;
என்னைப் பார்க்கவேண்டும்.
உன் குரலை
காற்றில் கசியவிடு;
என்னைக் கேட்கவேண்டும்.

ஒன்று தெரியுமா?
தனிமையும் துன்பமும்
அறிமுகமானது
உன் அறிமுகத்துக்கு
பின்னால்தான்.

அவை என்னோடு
பழகும் அளவுக்கு
நீ பழகவில்லையே!

காதலர் தினத்தை
உலகமே
கொண்டாடுகையில்
என்னைக் கொண்டாடுகிறது;
தனிமை.

நான்
உன் நினைவுகளிடம்தான்
சிறைப்பட்டுக் கிடக்கிறேன்;
என் விடுதலையே
வந்துவிடு.

ஏதோதோ கவிதைகளை
எழுதிக் குவிக்கும் நான்
என் கவிதையை
இன்னும் எழுதவே இல்லை;
அதற்கான எழுதுகோலே
வந்துவிடு.

என்
வாழ்க்கைச் சித்திரத்தை
வரையவேண்டிய
தூரிகை நீ;
அங்கே என்னசெய்கிறாய்?

தொலைத்துவிடுவேன் என்றா
இதயத்தை கொடுக்க மறுக்கிறாய்?
தொலைத்தால்
எங்கே தொலைக்கப் போகிறேன்
உன்னைத் தவிர?



**த.இலக்கியன்**

# உருகும் நிம்மதி

வறுமையிடம் மல்லுகட்டி
பசியை விற்றுக்கொண்டிருக்கிறான்
சுண்டல்காரன்.

தன் வெற்றான வாழ்வை
மூச்சுக் காற்றை விற்று
நிரப்புகிறான்
பலூன் விற்பவன்

வாட்டும் வெய்யிலில்
வறுத்தெடுக்கப்படுகிறாள்
மீன்காரி

தன் வாழ்வின் ஓட்டைகளால்
புலம்பிக்கொண்டிருக்கிறான்
புல்லாங்குழல் விற்பவன்

மளிகைக் கடனை எண்ணி
உருகிக்கொண்டே இருக்கிறது
ஐஸ் வண்டிக்காரனின் நிம்மதி

இத்தனை போராட்டங்களை
இடிக்க
மதக்கொண்ட புல்டோசர் எங்கே?

# புறநானூறு – தமிழரின் பேரிலக்கியம்

## – முனைவர் நா. நளினிதேவியின் நூல் திறனாய்வு



தமிழ்ப் பேராசிரியரான முனைவர் நா. நளினிதேவியின் மிகச் சிறந்த படைப்பாகிய இந் நூல் அவரின் இடையறாத ஆய்வுத் தேடலில் விளைந்த நல் முத்து. மார்க்சியத் தமிழறிஞர் திருமிகு. கோவை ஞானி அவர்களின் வழிகாட்டுதலில் புறநானூற்றைத் தமிழரின் மூலமுதல் பேரிலக்கியமெனப் புதிய பார்வையால் புரட்டிப் போட்டுள்ளார். சமயம் மேலோங்கிய காலத்தில் கம்பராமாயணம் தமிழின் பேரிலக்கியம். தமிழர் பண்பாடும் வீரமிக்க விழுமியங்களும் விழுதூன்றிய காலத்தில் புறநானூறு தமிழரின் பேரிலக்கியம். ஞானி குறிப்பிடுவது போன்று அது தமிழர் போற்றி வளர்த்த அறத்தின் ஒருங்கிணைந்த உயிர்த் துடிப்பு.

ஆரூர் தமிழ்நாடன் முன்னுரையில் குறிப்பிடுவதைப் போன்று, புறநானூறு என்ற தமிழ் இலக்கியப் பெட்டகத்திலுள்ள பேரிலக்கிய முத்துக்களை நளினிதேவி அவர்கள் நம் காலத்து நவீன அவ்வையாராக நம்மிடம் கொண்டுவந்து சேர்த்துள்ளார். போர்க்காலச் சூழலிலும் போருக்கெதிரான கருத்துக்களைப் பதிவு செய்த இலக்கியத்தை நம் காலத்திலும் தேவை என்று வாதிடுகிறார். அறமும் ஈரமும் சாரமும் இல்லாத மேலைப் போரிலக்கியத்தின் வெறிப்போக்குகளைச் சாடுகிறார். மனிதநலச் சிந்தனைகளையும் சமகால நெருக்கடிகளுக்கான தீர்வுகளையும் ஏந்தி நிற்கும் மாந்த இலக்கியம் புறநானூறு என்று பெருமை பொங்கிட அடையாளம் காட்டுகிறார். எண்ணற்ற மனிதர்களின் வாழ்வியல் நெருக்கடிகளின் போராட்டங்களின் பதிவாகப் புறநானூறு விளங்குவதைச் சுட்டிச் செல்கிறார். அகழாய்வில் புதிய புதிய உண்மைகள் வெளிச்சத்திற்கு வருவதைப் போன்றே இலக்கிய ஆய்விலும் புதுப்புதுப் பொருள்கள் காலத்தின் தேவைக்கேற்ப தோன்றுகின்றன என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டுகிறார்.

முனைவர். நா.நளினிதேவியின் பார்வையில் அளப்பரிய ஆற்றல்களுடையவன் மனிதன். கடவுளுக்கும் மன்னருக்கும் அடிபணிய மறுப்பவன். மனிதனுக்கு மனிதன் உற்ற துணை என்று உறவாடுபவன். துன்புறும் மாந்தரை இன்புறச் செய்பவன். சாதியும் வர்க்கமும் பாலின வேற்றுமைகளும் இல்லா மானுடன். இவனையே புறநானூறு சிறப்பிக்கிறது. உண்பது நாழி. உடுப்பது இரண்டே என்ற எளிமையை அனைவருக்கும் அறிவுறுத்துகிறது. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் எனினும் மக்களைக் காப்பதே மன்னனுக்குச் சிறப்பு என்பதை ஓயாது ஓம்புகிறது.

இனக்குழு பாத்தூண் மரபை உடைத்து நொறுக்கிய உடைமைப் பற்றும் இல்லாமையின் வறுமையும் இருப்பவன் உண்டாக்கிய

ஏற்றத்தாழ்வுகளுமே இறைநெறி மயக்கத்தில் மக்களை அழுத்தி மனித ஆற்றலை முடக்குகின்றன. மனிதனுக்கு மனிதன் எதிரியானான். இச் சூழலில் மட்டுமின்றி எச்சூழலிலும் கைவிடமுடியாத மனிதப் பண்பையும் ஆற்றலையும் வலியுறுத்துவது புறநானூறு. அது காடுகளும் நாடுகளும் மானுட உறவுகளும் நலமோடு வாழ்ந்திடச் செய்யும் தொலைநோக்குடைய பயிற்சி ஏடு.

இன்றைய இந்தியாவின் எல்லைகளையே புறநானூறு பழந்தமிழக எல்லைகளாகக் குறிக்கிறது. அரசுரிமை மக்கள் நலனுக்காகவே என்று மன்னனே (நலங்கிள்ளி) பாடுகிறான். வரிவிதிப்பால் மக்களை வாட்டி வதைப்பது சிறப்பாகாது என்பதே புறநானூறுவின் அரசியல் கொள்கை. மக்களுக்குக் கேடு எனில் மன்னனுக்கும்தான். போரின்றி அண்டை நாடுகளோடு நல்லமைதியில் மகிழ்வோடு வாழ்தலே சிறப்பு. இன்றைய அரசுகளும் புலவர்களும் இந்தத் திசையில் செல்லவில்லை. உள் – வெளிப் பகை வளர்த்து வயிறு வளர்க்கும் கேவலங்களே நடைபெறுகின்றன.

நல்லாட்சி நல்கிய சீறூர் மன்னரின் எளிய பரிசிலைப் பெரிதும் உயர்வெனக் கருதினர். உண்பது நாழி. உடுப்பது இரண்டே என்று பொதுமை வளர்த்தனர். தனக்குத் தொடர்பில்லாதவரோடும் சேர்ந்துண்ணும் மரபு இன்று மடிந்து விட்டது. பசி உணரும் முன்பு பனங்கூடைச் சோறு தரும் குறுநில மன்னரை யானைகளைப் பரிசாக்கும் பெருமன்னரைவிட உயர்வாக்குகிறார் மல்லிகிழான் காரியாதியைப் பாடும் ஆவூர் மூலக்கிழார். காட்சிக்கு எளியன் கடுஞ்சொல் அல்லனேல் மீக்கூறும் மன்னன் உலகம் என வள்ளுவம் கூறுவதற்கான அடிப்படை இவர்களே.

தமிழ் மன்னர் தமக்குள் போர் புரிவது வேற்றவர்க்கே பயன்படும் என்ற அரசியல் நெறியை அவ்வையார் அன்றே எடுத்துரைக்கிறார். இராமயணமும் பாரதமும் கண்ணால் பார்த்திராத கற்பனை மாந்தரை வியக்கின்றன. உரைக்கின்றன. ஆனால் இரத்தமும் சதையுமாய் உரையாடி எதிர் நிற்கும் மாந்தரைப் பற்றிய மெய்யான தரவுகளைப் புறநானூறு சுட்டுகிறது. அரசியல் நெறி வகுப்பதில் பங்கு பெற்றவர்கள். எனவே புறநானூறு புலவர் அன்றைய மக்கள் தொடர்பு ஊடகர்.

மக்களைக் காக்கத் தவறி அறத்தொடு நிற்றல் அற்ற மன்னர் கடியப்பட்டனர். மேலும் மன்னர்கள் கடவுளாக்கப்படவில்லை. கடவுளரே மன்னர்களுக்கு உவமையாக்கப்பட்டனர். மன்னன் மக்களை ஆற்றாது அழுத கண்ணீரோடு தவிக்கவிடுவதை சாணக்கியம் ஞாயப்படுத்துகிறது. புறநானூறு கண்டித்து நெறிப்படுத்துகிறது. போதையூட்டும் பொய்ப் புகழுரைகள் மனிதப் பண்மை மாய்க்கும் என்பதால் கவனமாய்த் தவிர்க்கப்படுகின்றன.

எக்குடி தோற்பினும் தோற்பது நம் குடியே என கோவூர்க்கிழார் சோழன் நலங்கிள்ளி – நெடுங்கிள்ளி போரில் அறிவுறுத்துகிறார். பகைமன்னர் பிள்ளைகளையும் ஒற்றன் எனக் கருதிக் கொல்லப்பட இருந்த புலவர்களையும் புறநானூற்றுப் புலவர்கள் தலையிட்டுக் காத்துள்ளனர். போரை நிறுத்திடப் போராடி வெற்றி பெற்றுள்ளனர்.

அரசியல் சீர்கேடுகளுக்கும் வாழ்வியல் நெருக்கடிகளுக்கும் புறநானூறு பொய்யான கடவுள் சார்ந்த கற்பனைத் தீர்வுகளை முன்மொழிவதில்லை. எனவே புறநானூறு அசலான மக்கள் சார்புடைய அரசியல் இலக்கியம்.

செருமானியர் யூதரைக் கொன்றொழிப்பது போன்ற இனப் படுகொலைப் போர்களை வலியுறுத்தும் மேலை இலக்கியங்கள் பேரழிவுப் போர் இலக்கியங்கள். மந்திர தந்திரங்களும் கற்பனைப் புனைவுகளும் மற்றொரு வகை. போரியல் என்பதைப் போர் வெறியியல் என்றாக்கியுள்ளன. இவைகளுக்கப்பால் வீரத்திற்கும் போருக்கும் இலக்கணம் வகுத்ததும் கடும்போரிலும் போருக்கெதிராகப்

பாடியதும் புறநானூறே. வீரம் உடல் சார்ந்த ஒன்றெனக் கருதாது மனம் சார்ந்ததொன்று என்பதையும் எடுத்துரைக்கிறது.

வென்றவனைவிடத் தோற்றவனின் மாண்பை உயர்த்திப் பிடிப்பதை புறநானூற்ற இலக்கிய ஆளுமை எனலாம். துதிபாடிகள் தோற்றுப் போகும் இடம் இதுவே. போக்கற்றோரும் செருக்கற்றோருமே புறநானூறு போற்றும் வரலாற்று மாந்தர்கள். ஏழு மன்னர்களைத் தோற்கடித்த இளவயதுப் பாண்டியன் போர் நடந்த இடத்தாலேயே அறியப்படுகிறான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

வஞ்சினம் கூறி வெற்றி பெறல் புறநானூற்றின் தனிச்சிறப்பு. இல்லை என்று வருகிறவனுக்கு இல்லை என்று கூறுகிற அளவிற்கு நான் வறுமை எய்துவேனாக. வஞ்சினத்திலும் பொதுநலம் வெளிப்படுவது உலக இலக்கியத்தில் வேறெங்கும் இல்லை.

போர் நடக்கிறது. அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குக் குடிபெயருங்கள். மன்னனின் முதற் பெரும் கடமை இதுதான். மக்களைக் காப்பது. அதற்குப்பிறகே போர். கண்ணகியும்கூட தீயவர் வாழும் தீய இடங்களை மட்டும் தீ அழிக்கட்டும் என்ற கூறுவதையும் இங்கு சிந்திக்க முடியும். போரும் நால்வகைப் படையும் என்பதற்காகவே உருவாக்கப்பட்ட ஒன்று சதுரங்கம். குழந்தை பிறந்து இறந்தாலும் குறையாகப் இறந்தாலும் வாளால் கீறி மண்ணில் புதைப்பதில் தமிழ் மரபும் வீரமும் மட்டுமல்ல தமிழ்நேயமும் வெளிப்படுகிறது. யானைகளோடு இளஞ்சிறார்களை விளையாடச் செய்வதில் அஞ்சாமல் வாழ்கிற உளவியல் வளர்த்தெடுக்கப்படுகிறது. போரில் தந்தத்தால் குத்தியெறியப்பட்டாலும் நிலைகுலையாது இருப்பதற்கான இருத்தலியல் வாழ்வியல் இதுவெனக் கொள்ளலாம்.

கோப்பெருஞ் சோழனும் பாண்டி நாட்டுப் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் பார்க்காமலேயே நட்புக் கொண்டவர்கள். வடக்கிருத்தலாலும் அவர்கள் நட்பைப் பிரிக்க முடியவில்லை. பொத்தியார் என்ற புலவனும் மிகுந்த அளவிற்கு இம் மன்னனோடு நட்புக் கொண்டிருந்தார். அதியன் – அவ்வை நட்பு உவமைகூற முடியாதது. நெடுங்காலம் வாழவைக்கும் நெல்லிக் கனியைத் தான் உண்ணாது தமிழ் காத்த அவ்வைக்குத் தந்தான் அதியன். அவ்வை கோவூரார் பிசிராந்தையார் பரணர் வன்பரணர் பொத்தியார் நட்பின் ஆழம் நம்மை வியக்க வைப்பது. கபிலருடன் பாரியின் நட்பும் தனிச்சிறப்பானது. பாரியை இழந்தபின் உயிர் வாழ்தலில் கபிலருக்கு விருப்பம் இல்லை. கபிலர் பாரியோடும் பாரிமலையாம் பறம்போடும் நட்பு கொண்டவர். பேகனின் அகவாழ்வைத் திருத்தியோர் அவனோடு நட்பு கொண்ட புலவர்கள்தான். விரும்பியதைக் கேட்கச் சொல்லிப் பேகன் பணித்தபோது காதல் மனைவியோடு பேகன் சேர்வதே தனக்குப் பரிசில் என்கின்றனர் அரிசில் கிழாரும் பெருங்குன்றூர்க் கிழாரும். புறநானூறு நட்பின் ஆழஅகலங்களை விதந்தோதுவதில் தன்னிகரற்று விளங்குவதால் அது நட்பின் இலக்கியம்.

பெண் முதன்மைச் சமுதாயமாகவும் மகளிர் வாழ்வியலின் உச்சமாகவும் விளங்கியது சங்க காலச் சமுதாயம். உலகின் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு பெண்பாற் புலவர்கள் அக்காலத்தில் இல்லை. ஆண் முதன்மைச் சமுதாயம் பெண்ணை வீட்டிற்குள் முடக்கியது. புறநானூற்றுப் பெண்கள் ஆணுக்கு இணையானவர்கள். அவ்வையார் வெண்ணிக்குயத்தியார் போன்ற புலவர்கள் வெளிப்படுத்தும் கட்டற்ற மனமும் துணிவும் கலகமும் கவிதைகளும் அக்கால உலக இலக்கியங்கள் எதிலும் இல்லை.

அள்ளுர் நன்முல்லையார் ஒக்கூர் மாசாத்தியார் காக்கைபாடினியார் காவற்பெண்டு குறமகள் இளஎயினி பாரிமகளிர் பூங்கண் உத்திரையார் பெருங்கோப்பெண்டு நக்கண்ணையார் நச்செள;ளையார் மாறபித்தியார் வெண்ணிக்குயத்தியார்

வெறிபாடிய காமக் கண்ணியார் என்று அறிவு மகளிர் பட்டியல் அளவின்றித் தொடர்கிறது.

அறவழி அரசியலைப் புறநானூறு போற்றுகிறது. அறவழியற்ற அரசியலைக் கடிந்துரைக்கிறது. சாப்பறையும் மணமுழவும் அருகருகே கேட்கத் தொடங்கிவிட்டன. மாறிவரும் சூழலில் துன்பமே உலகம் என்றோ வாழ்வே மாயை என்றோ ஒதுங்கிவிடாமல் துன்பத்திற்கிடையிலும் இன்புற்று வாழ்தலே உலகியல் வாழ்வியல் என்று பக்குடுக்கை நன்கணியார் வரையறை செய்கிறார்.

புறநானூறு மக்கள் சமுதாய வரலாற்றுப் பதிவு. வாழ்ந்தவரைக் காட்டிச் சமுதாயத்தை வாழவைக்கவும் செம்மைப்படுத்தவுமான முயற்சி. அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் இப்பேருண்மைகளைச் சுமந்து நிற்பதால் புறநானூறு தமிழரின் மூலப் பேரிலக்கியம். முதற்பேரிலக்கியம். இதுகாறும் இதை உணராதிருப்பது தமிழுக்கும் தமிழருக்கும் பேரிழப்பு.

இந்நூலில் பிற்சேர்க்கையாகச் சில புறப்பாடல்களும் விளக்கங்களும் இடம்பெறுகின்றன. தொகுப்புரையில் புறநானூறே தமிழின் மூலப் பேரிலக்கியம். அதில் வெற்றுக் கற்பனைகள் இல்லை. கடவுள் துதி இல்லை. போரினிடையே எங்கெங்கும் பசுமையும் பொதுமையும் பூத்துச் சிரிக்கின்றன. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்து சிறந்த மனிதர்களின் வாழ்வியல் தொகுப்பு புறநானூறு.

இதனுள் பல குரல்களும் பல உணர்வுகளும் பல விழுமியங்களும் பல நம்பிக்கைகளும் சிந்தாமல் சிதறாமல் சேகரிக்கப்பட்டுள்ளதை இவரின் ஆய்வு சுட்டுகிறது. சமகாலத்தின்; ஆபத்தான அரசியல்–பண்பாட்டு ஆதிக்க ஒற்றைக் குரல் நல்லதுமல்ல நமக்கேற்றதும் அல்ல என்பதையும் காட்டுகிறார்.

புதுப்புனல் வெளியீடு.

**பக்கம் 342. விலை.360.**

*புதுப்புனல்.*

பாத்திமா அடுக்கம்.(முதல் மாடி).
117. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை.
சென்னை – 600005.



**முனைவர். சோ. பிலிப் சுதாகர்**

**திண்டுக்கல்**

# பிரமிளின் பார்வையில் மௌனி

மௌனியின் கதைகள், படிக்கும்போதே உயர்வகையான மனக் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இக்கிளர்ச்சிக்கான காரணங்களைக் கதைகளில் ஆராயும்போது, அவைகள் இப்படி அசாதாரணமான பாத்திரங்களைச் சுற்றி அமைவதாக காண நேர்கிறது என்பது, மேற்படி கூற்றுக்களுக்குக் காரணமாகலாம்.ம

ஆனால் திரும்பத்திரும்பப் படிக்கிறபோது, இந்த வெளிக் காரணங்களைப் பற்றிய சிரமம் பின்தங்கி மங்கிவிடுகிறது. ஒரு உயர்ந்த மனவெழுச்சியை உண்டாக்கிவிட்டுப் பாத்திரங்கள் மங்கி மறைந்துவிடவே தோன்றின என்ற உணர்வினால் இது நேரலாம். உண்மையில், மௌனி கதைகள் திரும்பத்திரும்பப்படித்து அநுபவிக்கத்தக்கவை.



இலக்கியம், படிக்கும்போதே அனுபவிக்கத்தான். மௌனி கதைகள் இதற்குத் தகுந்த உதாரணங்கள் என்பதோடு, அவர் கதைகளில் கண் அர்த்தம், தத்துவச் சரடு ஏதும் கிடையாது. அங்கங்கே தெளிவுபட்டு, எட்டி உயர்ந்து செல்லும் சிந்தனைப் பொருள்கள், வேகம் கொண்ட வசனங்களில் வருகின்றன. இதுதான் அவரைப்பொறுத்த அளவில் ஆழமானது. அவ்விடங்களில் மௌனியின் வசனம் சிக்கலாவதும் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வசனங்களில் சொல்வதால் பொருளின் வேகம் குறைந்து விடும் எனக்கருதி, சொல்ல வந்ததை ஒரு தரிசனமாகக் கண்ட கனத்தின் வேகத்தோடு, ஒரே வசனத்தில் சொல்ல முயன்றவைதான் அவை.

சாதாரணமான கதைகளிலேயே ஒரு காவிய உணர்வை, மௌனி மட்டும்தான் இன்று தருகிறார். அவரது சொற்களால் தீண்டப்பட்டதும், இயற்கைப் பொருள்களிலிருந்து, சங்கீதம், பெண்மை என்பன வரை, தம்மை மீறி வியாபகம் பெறுகின்றன. படிக்கப்படிக்க அலுக்காத உணர்வோட்டமும் இலக்கிய நயமும், இதனாலேயே மௌனி கதையில் பரந்து கிடைக்கின்றன.



இந்த அளவு உன்னதமான காவியத்தன்மை, உலக இலக்கியத்திலும் அபூர்வமாகவே காணப்படுகிறது. தமிழுக்கு, இந்த வறண்ட வேளையில் இந்தப் படைப்புகள் கிடைத்தது அதிர்ஷ்டம்தான். இருந்தும், இவை தமிழுக்கு மட்டும், அதுவும் இந்த வேளைக்கு மட்டும் உரியனவல்ல; சிலவற்றின் ஜோதி, காலத்தால் குன்றாது, தேச வரம்புகளையும் மீற ஜொலிப்பது என்று தோன்றுகிறது.



- முனைவர் ஜோ.சம்பத்

உதிர்ந்த சிறகுகளை
ஒட்டவைக்கிறாள் சிறுமி
வண்ணத்துப்பூச்சி பறக்கிறது

அறிவியல் ஆய்வக
அமிலத்தில் மிதக்கின்றன
பாஷோவின் தவளைகள்

பூனை தூங்கும்
அடுப்பங்கரையில்....
விழித்திருந்தது ஏழ்மை

பசித்த வயிற்றுக்குள்
நிரம்பியிருந்தது...
நேற்றைய உணவின் ருசி

கிண்ணத்தை நிரப்பியது
ஓட்டைக் குடிலின்...
சூரியக் கதிர்கள்

பசி வந்தும் பறக்காத
தட்டுகள் பறந்தன ...
புயல் வந்ததும்

அவலமுற்ற மானுடத்தை
மேலும் அலைக்கழிக்கிறது...
ஆண்டின் கடைசி மாதம்

எவருக்கும் தெரியாமல்
ஒளித்து வைக்கின்றனர்
சுயம் தாங்கிய மனதை

எல்லோரும் அறிந்துகொள்ள
மறைக்கப்படவில்லை
உண்மையின் இருப்பிடம்

திறக்கப்பட்டுள்ள
அறைக்குள்ளிருந்து வருகிறது
மனிதநேய வரவேற்பு

மூடிய கதவுகளுக்கு
எப்போதும் தெரியவில்லை
வீட்டின் முகவரி

பயணத்தின் தொடக்கம்தான்
முடிவு என விளக்குகிறதோ?
நாட்களின் நகர்வுகள்

முடிந்த பயணத்தின்
தொடர்கதையானது
பயண அனுபவங்கள்

# ஹைக்கூ மலர்கள்



- கா.ந.கல்யாணசுந்தரம்

B-U-G-S

உலகில் பிறந்தேன் உலவிட எழுந்தேன்.
முதலில் பார்த்தேன் அம்மாவின் முகம்...
சிரித்துப் பேசி சிரிப்பு மூட்டி
முகத்தருகே முகத்தைக்காட்டி முத்தம் ஈந்தாய்...
ஆரத்தழுவினாய் அன்பைப்பொழிந்தாய்
பசியெனக்கத்தும் முன் ரத்தத்தை மாற்றி
அமுதான பாலை ஊட்டினாய்..

அம்மா முகமே அறிந்த எனக்கு
மடிமாறி ஏந்தும் அப்பா முகத்தைக் காட்டினாய்...
அத்தை மாமா சித்தி சித்தப்பா
பன்முகங்காட்டினாய்...
குழப்பம் இல்லா உறவைக் காட்டினாய்
கை மாற்றினாய்...
சொன்னவர்கள் தந்தனர் முதல் காதல்
காதலெனத் தெரியாது வந்த காதல்...
சிறப்பாய் இருந்ததே மகிழ்வாய்க் காத்ததே காதல்...

உறவைச் சொல்லி வீட்டைக் காட்டினாய்...
நம்ப வீடு, எதிர்த்த வீடு சித்தி வீடு
அத்தை வீடு, பாட்டி வீடு காட்டித்
தன் வீடென எதையும் காட்டாது
இது தான் உன் வீடு என்று சொன்னாயே...

# அன்புள்ள அம்மா அப்பாவிற்கு

மொழியைச் சொன்னாய்
மொழிந்திட வைத்தாய்
தமிழது அமிழ்து என்றாய்...
பைந்தமிழ் கற்க 'அ' னா 'ஆ' வனா
சொல்லித்தந்தாய்...
நான் கற்றிட வராத மொழி
உனது வாயில் 'ழ' கரம் எளிதில்
வந்திட, எப்படி என்று நாக்கை மடித்துக்காட்டி சொல்லித்தந்தாயே...

அப்பா அப்படாவெனக் காலை எழுவார்...
என்னைத் தூக்கிக் கொஞ்சிடத்
தோளில் சாய்த்து 'லூலாயி' சொல்லுவார்...
சிறிது நேரம் செல்ல காட்டுக்குச் செல்வார்...
அந்தியில் வருவார் குதிரை ஏற்றுவார்
முட்டிப் போட்டே நாலு காலாய் நடப்பார்...
கன்னத்தில் கன்னத்தை வைத்தே
கண்களை மூடி பல்லைக் கடித்துக்
கண்டதை உளறுவார்...
கன்னத்தை கன்னத்தில் வைத்துப்
பல்லைக்கடித்துப் பாரடா என்று முத்தம் ஈவார்...

அந்தக் காதலே தேனென இனித்தது...
தமிழென தரணியில் அதுவே
சர்க்கரை நோய் தராத இனிப்பாய் இருந்தது...
தாலாட்டி என் தளர்விலா ஆன்மாவை வளர்த்தது...

எங்கு சென்றாலும் தோ வந்துட்டேன்
கடைக்குப் போய் வரேன்னு சொல்லி
சென்று திரும்பி வருவீர்கள்...
சொல்லாமலே எங்குச் சென்றீர்கள்
இருவரும்...

நெஞ்சில் பாரமும் விழிகளில் நீரும்
கொண்டு புரியாது உள்ளேன் இறைவா...
ஈந்து விடு அல்லது என்னை எடுத்து செல்....
உங்கள் உயிருக்கு உயிரான.

**–கு.கதிரேசன்,**
**திருச்சி.**




**நான் நிரந்தரமானவன்**

**அழிவதில்லை!**

**எந்த நிலையிலும் எனக்கு**

**மரணமில்லை!**

கவியரசு கண்ணதாசனின் நூற்றாண்டு விழா, இன்னும் சில வருடங்களில் வருகிறது. கடந்த 24 ஆம் தேதி அவருடைய 95ஆவது பிறந்த நாள் வந்து போனது. ஒரு சாதாரண அரசியல்வாதிக்கு எடுக்கும் பிறந்த நாள் அளவிற்குக் கூட அவரை எவரும் கொண்டாடவில்லை. பெரும்பாலான இலக்கிய அமைப்புகளும் அவரைக் கைவிட்டது போல் தெரிந்தது. இது வருத்தத்திற்குரியது.



நம் தமிழ் மொழியின் சொத்தாக வந்த ஒரு மாபெரும் கவிஞனை பலரும் எளிதாகக் கடந்து போகிறார்கள் என்பது வேதனை.

வாழும் போது கண்ணதாசனைப் போல் மக்களால் கொண்டடப்பட்ட கவிஞர்கள் எவரும் இல்லை. அவர் பாடல் ஒலிக்காத நாள் இல்லை. இப்போதும் கூட திருமண வீடுகளிலும் துக்க வீடுகளிலும் வைக்கிற பேண்ட் வாத்தியக்குழுவினர், கண்ணதாசனின் பாடல்களை மறக்காமல் இசைத்துவருகிறார்கள்.

ஏனெனில் அது போன்ற நிகழ்ச்சிகளில்

**' வாராயோ தோழி வாராயோ...**
**மணப்பந்தல் காண வாராயோ...'**

–என்றும்

**' போனால் பொகட்டும் போடா'**

இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?

–என்றும் தமிழர்களின் மகிழ்வையும் துயரத்தையும் கொண்டாடிய மகாகவி அவர்.

'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்; வாசல் தோறும் வேதனை இருக்கும்'– என்பது போன்ற அவரது பாடல்கள் அவரின் அனுபவத்தில் விளைந்த விளைச்சல். இப்போதும் தாலாட்டாக, பலரின் துயரங்கள், துன்பங்களுக்கு ஆறுதலாக, பலருக்கும் இருப்பவை அவரது பாடல்கள்தான்.

திரைப்பாடலில் மட்டுமல்லாது, மரபுக்கவிதைகளிலும் சிறுகதைகளிலும், புதினங்களிலும், கட்டுரைகளிலும், மேடைப்பேச்சிலும் தன் முத்திரையைத் தனித்துவமாகப் பதித்து, பன்முகத்திறனாளியாகக் கொடிகட்டிப் பறந்தவர் கண்ணதாசன். ஏறத்தாழ எட்டாயிரம் திரைப்படப் பாடல்களையும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியவர் அவர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு அருகில் உள்ள சிறுகூடல்பட்டி கிராமத்தில் பிறந்த அவருடைய இயற்பெயர் முத்தையா. ஒரு பத்திரிக்கை ஆசிரியர் பணிக்கு சென்றபோது



அவர் வைத்துக் கொண்ட புனைப் பெயர்தான் கண்ணதாசன். அந்தப் பெயரே காலவெளியில் நிரந்தரமாக நிலைத்து நின்றுவிட்டது.



=‘ஆயிரத்தில் ஒருவன்’ திரைப்படத்தில் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தும் விதத்தில் வரும் பாடலை பல கவிஞர்கள் எழுதியும் எம்.ஜி.ஆருக்கு திருப்தி வரவிலை. கடைசியாக அவர் கவிஞர் கண்ணதாஸனை ஏழுதச்சொன்னபோது, அவர் எழுதினார்...

**‘அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்**
**இதோ இந்த அலைகள் போல**
**ஆட வேண்டும்**
**ஒரே வானிலே ஒரே மண்ணிலே**
**ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்’**

– என்று பல்லவியை எழுதியபோதே, எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்திருக்கிறார். அடுத்தடுத்து தன் சரணத்தில்...

**‘காற்று நம்மை அடிமையென்று விலகவில்லையே**
**கடல் நீரும் அடிமையென்று சுடுவதில்லையே**
**காலம் நம்மை விட்டு விட்டு நடப்பதில்லையே**
**காதல் பாசம் தாய்மை நம்மை மறப்பதில்லையே’**

– என்று எழுதிக்கொண்டே போய் படப்பிடிப்புக் குழுவினரையே ஆட வைத்திருக்கிறார் கண்ணதாசன். அவரது மாங்கனி காவியமும், தைப்பாவையும் மறக்கமுடியாத மரபுச்சுடர்கள். கண்ணதாசனைப் பற்றி அவரே எழுதினார்...

**‘நான் நிரந்தரமானவன் அழிவதில்லை**
**எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை’**

–இதைத்தான் எப்போதும் வழிமொழிகிறது காலம்.

–சூர்யா

# அழைக்கிறேன்...



– மனுஷ்ய புத்திரன்



பெயர் வைத்ததிலிருந்து
உனது இந்தப் பெயரை
எத்தனை பேர்
எத்தனை ஆயிரம் முறை கூப்பிட்டிருப்பார்கள்?

நான் முதன் முதலாக
உன்னைப் பெயர் சொல்லி அழைத்த
முதல் கணம்
நீ ஏன் அப்படித் திகைத்து நின்றுவிட்டாய்?

அந்தப் பெயருக்கு
அப்படி ஒரு தித்திப்பு உண்டென்பதை
அப்போதுதான் அறிந்துகொண்டதுபோல

இந்த உலகிலேயே
உனக்குத்தான்
அந்தப் பெயர் இருக்கிறது
என்பதுபோல

மேலும் நீ அப்போதுதான் பிறந்துவந்து
முதன் முதல்
அந்தப் பெயரைக் கேட்பதுபோல

நீயே ஒரு முறை
உன் பெயரை
மறுபடி சொல்லிப் பார்த்துக்கொண்டாய்

நான் ஒன்றுமே செய்யவில்லை
உன்னை முதன் முதலில்
பெயர் சொல்லி அழைக்கும்போது
அந்தப் பெயர்மேல்
ஒரு வசிய மருந்தை லேசாகத் தடவினேன்
அவ்வளவுதான்

மேலும்
ஆயிரம் ஆண்டுகளுக்கு
தீராத நறுமணமுள்ள
வாசனைத் திரவியத்தை
அந்த பெயர்மேல் கொஞ்சம் தெளித்தேன்

அன்பே
நீ என்னைவிட்டு
கண்காணாமல் தொலைந்துபோகும்
கானகத்தில்
நான் நா வறள உன்னைப் பெயர் சொல்லி
அழைக்கும்போது
எங்கிருந்தாலும் நீ வந்துவிடுவாய்தானே?



# இரவு மழை

அழுதும் சிரித்து மனம்  நொந்து
விடாமல் முணுமுணுத்தபடி
நீண்ட தலைமுடியைக் கலைத்து விட்டு
தலை குனிந்தபடி இருக்கும்
ஒரு மனநலம் பிறழ்ந்துவிட்ட
இளம் பெண்ணைப் போல
என்முன் பெய்கிறது
இந்த இரவு மழை..

சோம்பலான இந்த மருத்துவமனை
சாளரக் கம்பிகளில் வந்து
சரம் சரமாய் வழிந்தபடி...
குளிர்ந்த விரல்களை  நீட்டி
என்னை திகிலாய்த் தீண்டும்
இரவின் மனச் சோர்வாகவே
வருகிறது இந்த இரவு மழை

நோய்தரும் மயக்கம் தவிப்பு
மெல்லிய பெருமூச்சு
வலி முனகல்கள் இவற்றால்
என் மனம் உடையும் ஓசை எழுகிறது.
இதில் நானே நடுங்கி ஒடுங்கி
படுக்கையில் புரண்டபடி
நான் துடிக்கும் போது
திடீரென என்முன் வந்து நின்று
ஆறுதல் கூறும்
பிரியமானவர்களை போல்தான்
இந்த இரவு மழை.

மோசமாகக் கெட்டுப்போன
உடல் உறுப்புகளை
அறுவை செய்து மாற்றலாம்
என்கிறார்கள்.–ஆனால்
கடுமையாக பாதிக்கப்பட்ட மனதை
எப்படி எங்கே மாற்றுவது?

## கவிஞர்

# சுகுதகுமாரி



முன்பு என் இதமான இரவுகளில்
எனக்குக் குளிரூட்டி மகிழ்வூட்டிய
ஈர நிலவைப் போலவே
அன்பை பொழிந்து உறங்க செய்த
அன்றைய தினத்தின் சாட்சியாகவே
இந்த இரவு மழை.

இன்றென் நோயின் உஷ்ண
அவஸ்தையில் தவிக்கும்
நள்ளிரவுகளின் இருட்டில்
தனித்து அழுவதற்கும் மறந்து
நான் உழலவும்,
சில வேளைகளில்
உறைந்து போகவும்
என் துக்கத்தின் சாட்சியாக
இந்த இரவு மழை.

இரவு மழையிடம்
நான் ஒன்று சொல்கிறேன்.
மழையே உன் துயர இசையை அறிவேன்
உன் கோபமும் கொந்தளிப்பும்
உன் அழுகையையும்
விடியலின் கிரணத் துண்டால்
துடைத்து கொண்டு வருகின்ற
உன்னையும் உன் துடுக்குத்தனத்தையும்
உன் நடனத்தையும் அறிவேன்.

ஒன்று தெரியுமா தோழி?
நானும் உன்போல் ஒரு
இரவு மழைதான்.





# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:
www.americamutamiluniversity.org

# என்ன பண்ண ?

நாடு நடுங்குதய்யா
நச்சுமழை போதுமய்யா
வெதவெதைக்க வேணும்
வெயில்கொண்டு வாருமய்யா

மழையும் வெறிக்க
மசமசன்னு வெயிலடிக்க
மூலையில வச்சிருந்த
மூட்டையப் போய் நான் பிரிக்க

வெதச்சோளம் நனைஞ்சிருச்சே
வெட்டியாய் பூத்திருச்சே
மொளைக்காத படிக்கு
மொளைகட்டிப் போயிருச்சே

ஏர்புடிக்கும் சாதிக்கு
இதுவேதான் தலையெழுத்தா?
விதிமுடிஞ்ச ஆளுக்கே
வெவசாயம் எழுதிருக்கா?

காஞ்சு கெடக்குதுன்னு
கடவுளுக்கு மனுச்செஞ்சா
பேஞ்சு கெடுத்திருச்சே
பெருமாளே என்னபண்ண?

–கவிப்பேரரசு **வைரமுத்து**

